# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 11,745 — 1959 මැයි 20 වැනි බදාදා — 20.5.1959

11,745 ம் இலக்கம் — 1959 ம் ஆண்டு வைகாசி மாதம் 20 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

4 B ம் மாதிரிப்பத்திரம்

1949 ம் ஆண்டின் 3 ம் இலக்க இந்தியர், பாகிஸ்தானிகள் (பிரஜா உரிமை) சட்டம்

சட்டத்தின் 10 ம் பிரிவின்படி அறிவித்தல்

1949 ம் ஆண்டின் 3 ம் இலக்க இந்தியர், பாகிஸ்தானிகள் (பிரஜா உரிமை) சட்டத்தின் 4 ம் பிரிவின் (1) ம் (2) ம் உட்பிரிவுகளின்படி இதனகத்துள்ள அட்டவணையிற் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒவ்வொன்றையும் அங்கீகரிக்கும் கட்டளையை, இவ்வறிவித்தல் திகதி தொடக்கம் ஒரு மாத காலத்துக்குள் பொது ஜனங்கள் எவரிடமேனுமிருந்து அத்தகைய கட்டளை பிறத்தற்கு மாறாக யாதேனும் எழுத்துமூலமான தடையும் அத்தடைக்கு ஆதாரமான நியாயங்களையும் உண்மைகளையும்பற்றிய அறிக்கையும் ஒருமித்து எமக்குக் கிடைத்தாலன்றி யான் பிறப்பிப்பேனென்று இந்தியர், பாகிஸ்தானிகளைப் பதிவுசெய்யும் பதிலதிகாரி விக்ரர் யோசேப்பு அரேலட் குணசேகரா ஆகிய யான் அச்சட்டத்தின் 10 ம் பிரிவின்படி இத்தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

தடைகூறும் அறிக்கை ஒவ்வொன்றிலும் தடைகூறுபவரின் முழுப்பெயரும் விலாசமும் இடப்பட வேண்டும்.

வி. யோ. அ. குணசேகரா,
இந்தியர் பாகிஸ்தானிகளைப்
பதிவுசெய்யும் பதிலதிகாரி.

கொழும்பு,
1959 ம் ஆடு வைகாசி மீ 16 ந் உ.

அட்டவணை

| விண்ணப்ப இலக்கமும் திகதியும் | இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்யும்படி விண்ணப்பஞ் செய்பவரின் பெயரும் விலாசமும் | விண்ணப்பஞ்செய்பவர் இலங்கைப் பிரஜையாகத் தம்மைப் பதிவுசெய்யும் பொழுதே, இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்ய விண்ணப்பஞ் செய்பவர் கோரும் ஒவ்வொருவரின் பெயரும் இனமுறையும் |
|---|---|---|
| I 5741—27.7.51 | முத்துவீரன் இராமசாமி, 61, கிறீன் அவுஸ், வட்டவளை | நாகம்மா அல்லது நல்லம்மாள் (மனைவி), தவமணி (மகள்) |
| J 10685—15.5.51 | வெள்ளைச்சாமி பெருமாள், மஸ்க்கேலியாத் தோட்டம், மஸ்க்கேலியா | அன்னம்மாள் (மனைவி), பூபதி (மகள்), ஜெயலெட்சுமி (மகள்) |
| J 10758—4.8.51 | வீரப்பன் வெள்ளைய நாயுடு, லக்சபானைக்கல்லப் பிரிவு, தெபேட்டன் கூட்டம், நோட்டன் பிறிச் | இலெச்சுமியம்மாள் (மனைவி), கிருஷ்ணராஜ் (மகன்), கண்ணம்மாள் (மகள்) |
| J 10766—30.7.51 | காளிமுத்து கிறிஸ்ரியன், கஸ்க்கிபென் தோட்டம், மஸ்க் கேலியா | சவரியம்மா (மனைவி), கபிறியல் அல்லது கோபால் (மகன்), செபமாலை அல்லது சோமாலைமேரி (மகள்), விலாசர் அல்லது லசாறஸ் (மகன்), மதலைமேரி (மகள்), மேரி (மகள்) |
| J 10843—4.8.51 | பெரியண்ணன் பெரிய ஆண்டி, கீழ்ப்பிரிவு, செயின்ற் யோன் டெல்றீத் தோட்டம், நோர்வூட் | வேலாயி அல்லது வேலம்மாள் (மனைவி) |
| J 10920—30.7.51 | ஞானமுத்து முத்திரி, மகானிலுத் தோட்டம், அப்கொட் | வள்ளியம்மை (மனைவி), சிருவமணி (மகள்), பாக்கியம் (மகள்), லீலாவதி (மகள்) |
| J 11068—5.8.51 | நல்லான் பக்கிரி, கஸ்க்கிபென் தோட்டம், மஸ்க்கேலியா | இலெட்சுமி (மனைவி), சிவபாக்கியவதி (மகள்), இராச லெட்சுமி (மகள்), நல்லையா (மகன்), புஷ்பவல்லி (மகள்), நாகராசா (மகன்) |
| J 11186—20.6.51 | பீற்றர் சேவியர் ஸ்ரானிஸ்லோஸ் டயஸ், கபிறியல் மிரான்டா அன்ட் சன்ஸ் மேற்பார்த்து, மஸ்க்கேலியா | மேரி இருதயம் லூயிசா (மனைவி), யோசேப்பு பெனடிக்ற் வியன்னி (மகன்) |
| J 11205—30.7.51 | முத்துச்சாமி மாயழகு, வனராசாக் கூட்டம், டிக்கோயா | சோலையம்மா (மனைவி), முத்துச்சாமி (மகன்), செல்லம் (மகள்), பாலக்கிருஷ்ணன் (மகன்) |
| J 11207—30.7.51 | முத்துச்சாமி பிச்சை, நியூ வலித் தோட்டம், நோர்வூட் | அருளாயி (மனைவி), சண்முகம் அல்லது இராயப்பான் (மகன்), யானகியம்மா (மகள்) |
| J 11400—22.7.51 | பெரியண்ணன் வேலு, வல்லடோலிட் பிரிவு, மொறேக் கூட்டம், மஸ்க்கேலியா | பட்டாயி (மனைவி), சுப்பிரமணியம் (மகன்), பெரியண்ணன் (மகன்), சிவலிங்கம் (மகன்), அரியநாச்சி (மகள்) |
| J 11580—22.7.51 | கிட்ணன் துரைச்சாமி, பார்குறூவ் தோட்டம், மஸ்க்கேலியா | அமிர்தம் (மனைவி), பொன்னையா (மகன்), கோவிந்தன் (மகன்), காளியப்பன் அல்லது ஐயன் பெருமாள் (மகன்), இலெட்சுமி (மகள்), நீலாவதி (மகள்), ஆறன் (மகன்) |
| J 11740—29.7.51 | குப்பன் தருமன், கிளனுக்கித் தோட்டம், மஸ்க்கேலியா | அமிர்தம் (மனைவி), குப்பன் (மகன்), சிவசாமி (மகன்) |
| K 1238—10.12.50 | இராமன் இராமசாமி, ஆட்லித் தோட்டம், டிக்கோயா | மாரியாயி (மனைவி), மாரிமுத்து (மகன்), செல்லம்மா அல்லது நாகம்மா (மகள்), இரெங்கசாமி (மகன்) |
| K 7261—6.5.51 | மாயாண்டி லாடன், பிறிட்வெல் பிரிவு, போகவானைக் கூட்டம், போகவந்தலாவை | சின்னம்மாள் (மனைவி) |

| விண்ணப்ப இலக்கமும் திகதியும் | இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்யும்படி விண்ணப்பஞ் செய்பவரின் பெயரும் விலாசமும் | விண்ணப்பஞ்செய்பவர் இலங்கைப் பிரஜையாகத் தம்மைப் பதிவுசெய்யும் பொழுதே, இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்ய விண்ணப்பஞ் செய்பவர் கோரும் ஒவ்வொருவரின் பெயரும் இனமுறையும் |
|---|---|---|
| N 1428—2.8.50 .. | வையாபுரி குழந்தைவேல், நடுப்பிரிவு, டண்சினன் தோட்டம், பூண்டுலோயா | மூக்காயி (மனைவி), நல்லாம்மா (மகள்), பழனி அல்லது கந்தையா (மகன்), முருகன் அல்லது முருகையா (மகன்), இலெட்சுமி அல்லது பொன்னரும்பு (மகள்) |
| Q 564—23.9.50 .. | கதிர்வேல் முத்தையா, மிடில்ரன் தோட்டம், தலவாக் கொல்லை | அமிர்தம் (மனைவி), சின்னத்துரை (மகன்), செல்லப்பா (மகன்), சுப்பையா (மகன்) |
| R 5032—30.7.51 .. | சுப்பிரமணியம் சுப்பையா, உடறதல்லைத் தோட்டம், நானு ஓயா | அம்முணி (மனைவி), சிவராமன் (பெரு மகன்), மாரியாயி அல்லது மாரியம்மா (மகள்), ஆராயி (மகள்), சுப்பிர மணியம் (மகன்), வள்ளி அல்லது சடையம்மா (மகள்), இலெட்சுமி (மகள்), கந்தசாமி (மகன்), ஐயாக்கண்ணு (மகன்) |
| X 5484—3.7.51 .. | வீராச்சாமி கோவிந்தன், கிறெயிக் தோட்டம், பண்டாரவளை | பொன்னுட்சி (மனைவி), நாராயணன் அல்லது தங்கவேலு (மகன்), நாகம்மா (மகள்) |
| X 9190—3.8.51 .. | மாரப்பன் கேசவன், கீழ்ப் பிரிவு, கிறெயிக் தோட்டம், பண்டாரவளை | பெரமாயி (மனைவி) |
| O 7178/X—8.7.51 .. | முத்துச்சாமி மாரிமுத்து, பங்களாய் பிரிவு, வல்டிமார்க் கூட்டம், உடப்புசல்லாவை | மாரியாயி (மனைவி), முத்தையா அல்லது சன்னுசி (மகன்), செல்லையா அல்லது பழனியாண்டி (மகன்) |
| X 2893/Z/X—3.6.51 .. | மாரப்பன் காளியண்ணன், சேர்வூட் தோட்டம், அப்புத்தளை | செல்லாயி (மனைவி), நல்லாம்மா (மகள்), அங்கம்மா (மகள்), வங்காளம்மா (மகள்) |
| V 232/Y—29.11.50 .. | தனவராயர் உடையப்பபிள்ளை மாணிக்கம் பிள்ளை, கண நாதன் ஸ்ரோஸ், 170, கீழ் வீதி, வதுளை | இராமாயி (மனைவி), சாரதாம்பாள் (மகள்), கணநாதன் (மகன்), தேவசுந்தரி (மகள்), இராமநாதன் (மகன்), அருணகிரிநாதன் (மகன்), பர்க்குணன் (மகன்) |
| CC 1289—23.5.51 .. | சோலைமலை கிட்ணசாமி, கிழக்குப் பிரிவு, எதரப்பொலைக் கூட்டம், புளத்கொகுப்பிட்டி | சுப்பம்மா (மனைவி), சோலைமலை அல்லது இராமையா (மகன்), சந்தணம் அல்லது தங்கையா (மகன்), காமாட்சி (மகள்), இராமன் (மகன்), இலெட்சுமணன் (மகன்), சின்னம்மா (மகள்) |
| C 5032/T/D—25.7.51 | குமரன் வடிவேலு, 153/2, சிறீ விக்கிரம ராசசிங்கா வீதி, 4 வது குருணை, நீர்கொழும்பு | சுப்பம்மாள் (மனைவி), சந்திரவேலு (மகன்) |
| M 2282—25.6.51 .. | அழகன் அழகன், உலோங்வில் தோட்டம், இரத்தோட்டை | ஆறுமுகம் அல்லது பெரியாம்பிள்ளை (மகன்), வள்ளி (மகள்), அமராவதி அல்லது அழகம்மா (மகள்), வேலுச்சாமி (மகன்) |
| M 3845—7.6.51 .. | செம்பன் முத்தையா, கறக்கத்தனைத் தோட்டம், கம்மடுவை | சின்னப்பிள்ளை (மனைவி), கறுப்பையா (மகன்), இராமையா (மகன்) |
| M 3876—7.6.51 .. | பம்பையன் மலையன், கறக்கத்தனைத் தோட்டம், கம்மடுவை | இராமாயி (மனைவி), அல்லி (மகள்), ஆண்டி (மகன்), ஆயிப்பிள்ளை (மகள்), ஆண்டிச்சி (மகள்), மலையன் (மகன்), ஆண்டியம்மா (மகள்), பார்வதி (மகள்) |
| M 4924—17.6.51 .. | பழனி வெள்ளைச்சாமி, எல்லக்கல்லைத் தோட்டம், இரத் தோட்டை | சின்ன அழகி (மனைவி), தங்கம்மா (மகள்), சின்னையா (மகன்), அழகம்மா அல்லது பிள்ளை (மகள்) |
| M 4974—17.6.51 .. | பிள்ளிக்குட்டி ஆறுமுகம், எல்லக்கல்லைத் தோட்டம், இரத் தோட்டை | முனியம்மாள் (மனைவி), சொக்கலிங்கம் அல்லது வெள் ளைச்சாமி (மகன்), இராமலிங்கம் அல்லது இராசலிங்கம் (மகன்) |
| M 4995—17.6.51 .. | கறுப்பன் வீரன், எல்லக்கல்லைத் தோட்டம், இரத்தோட்டை | பூச்சிப்பிள்ளை (மனைவி), முத்தையா (மகன்) |
| M 5015—17.6.51 .. | கூளையன் கறுப்பன், எல்லக்கல்லைத் தோட்டம், இரத் தோட்டை | நல்லம்மா (மனைவி) |
| M 5030—17.6.51 .. | பெரமன் முனியாண்டி, எல்லக்கல்லைத் தோட்டம், இரத் தோட்டை | முத்தாயி (மகள்), சிலம்பாயி அல்லது அம்மாக்கண்ணு (மகள்), சுப்பையா (மகன்) |

# நானாவித அறிவித்தல்கள்

## சித்திரப் போட்டி

### படமுத்திரைகளுக்குகந்த அலங்காரச் சித்திரங்கள்

**பொருத்தமானதெனத் தெரியப்படும் அலங்காரச் சித்திரத்துக்கு ரூபா 500 ரொக்கப் பரிசு**

இலங்கையில் பிரிவேனு சர்வகலாசாலைகளை நிறுவியதின் ஞாபகார்த்தமாக பத்துசத படமுத்திரை ஒன்று வெளியிடுவதென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இம்முத்திரைகளுக்குப் பொருத்தமான அலங்காரச் சித்திரத்தைத் தெரிவு செய்யும்பொருட்டு, மத்தியட்சர் குழுவொன்றுல் பொருத்தமானதெனத் தெரியப்படும் அலங்காரச் சித்திரத்துக்கு ரூபா 500 பரிசளிக்கப்பட இருக்கிறது.

இப்போட்டிக்கு அலங்காரச் சித்திரங்களை அனுப்புவோர் அவற்றை கொழும்பு 1, செனட் சதுக்கத்திலுள்ள வருமானவரி, பூதல்வரி முத்திரைக் கொமிஷனருக்கு (தபாற் பெட்டி எண் : 515) 1959, யூன் மாதம், 9 ம் தேதி, செவ்வாய்க்கிழமையளவிலாவது கிடைக்கத்தக்கதாக அனுப்புதல் வேண்டும்.



2. இப்போட்டியில் பங்குபற்றுவோர் பின்வரும் விஷயங்களை நினைவிருத்தல் வேண்டும் :—

(அ) பிரிவேனு சர்வகலாசாலைகள் நிறுவியதின் ஓராண்டு நிறைவு நாளாகிய 1-1-60 ல் இம்முத்திரை வெளியிடப்படும்.

(ஆ) அலங்காரச் சித்திரங்கள் இலங்கையில் பிரிவேனு சர்வகலாசாலைகள் நிறுவியதை நினைவூட்டுவதாக இருக்க வேண்டும்.

(இ) வணக்கத்திற்குரிய பொருட்கள் எவையும் சித்திரங்களில் இடம் பெறுதல் ஒண்ணது.

(ஈ) முத்திரையின் அளவு $1\frac{1}{2}'' \times 1''$ ஆகும். கூடியவரை அலங்காரச் சித்திரங்கள் மேற்கூறிய பரிமாண அளவுக்கு விகித சமமாகத் தீட்டப்படுதல் வேண்டும். ஆயின் எக்காரணத்தைக்கொண்டும் இச்சித்திரம் ஒரு தபாலட்டையின் அளவிலும் பார்க்கச் சிறியதாக இருத்தல் கூடாது. அலங்காரச் சித்திரத்தில் புகைப்படங்கள் உபயோகிக்கப்படுங்கால் புகைப்படத்தின் பிரதி ஒன்றை அனுப்புதல் உபயோகமாயிருக்கும்.

(உ) காகிதத்தில் ஒட்டப்படும்போது முத்திரைகளின் அலங்காரச் சித்திரங்கள் நீளப்பக்கமாகவோ அகலப்பக்கமாகவோ இருக்கக் கூடியனவாக அவற்றை வரையலாம்.

(ஊ) இந்த அலங்காரச் சித்திரத்துக்கு ஒரு தலைப்பு இடப்படலாம். இது சிங்கள மொழியில் சிறிய எழுத்துக்களில் இருத்தல் வேண்டும்.

(எ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் " இலங்கை " என்னும் சொல் பொறிக்கப்படுதற்கு இடம் விடப்படவேண்டும்.

(ஏ) சிங்களத்தில் " தபாற் செலவும் இறைவரியும் " என்ற சொற்களைப் பொறிக்க இடமிருத்தல் வேண்டும்.

(ஐ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் முத்திரையின் பெறுமதியைக் குறிப்பிட இடம் விடப்பட வேண்டும்.

(ஒ) இந்த அலங்காரச் சித்திரம் இரண்டு வர்ணங்களைக் கொண்டு தீட்டப்படல் வேண்டும். வர்ணங்களைத் தேர்ந்தெடுத்தல் ஓவியரைப் பொறுத்ததாகும்.

(ஓ) இந்த அலங்காரச் சித்திரங்களைத் தேர்ந்தெடுக்க நியமனஞ் செய்யப்பட்டும் மத்தியட்சர் குழுவின் அபிப்பிராயத்தின்படி அவை உரிய தராதரத்தையடையாத பட்சத்தில், பரிசு வழங்கப்படமாட்டாது.

(ஔ) வெகுமதி வழங்கப்படும் அலங்காரச் சித்திரமும் ஏற்றுக் கொள்ளப்பட்ட இதர அலங்காரச் சித்திரங்களும் அரசாங்கத்தின் சொத்தாகிவிடும்.

(ஃ) மத்தியட்சர் குழுவின் தீர்ப்பே முடிவானது.

3. இவ்வலங்காரச் சித்திரங்கள் " முத்திரைகளுக்கான அலங்காரச் சித்திரங்கள் " என்று குறிக்கப்பட்ட தபால் உறைகளில் இடப்பட்டு, வருமான வரிப்பகுதி, செனற் சதுக்கம், கொழும்பு 1 என்ற விலாசத்துக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது விசாரணைக் கந்தோரில் நேர்முகமாக ஒப்படைக்கப்படல் வேண்டும்.

எல். ஜி. குணசேகரா,
வருமானவரி, பூதல்வரி
முத்திரைகள் கொமிஷனர்.

1959, மே மாதம் 9 ந் தேதி.

## விளம்பரம்

1959 ம் ஆண்டு ஆனி (ஜூன்) மாதம் தொடக்கம் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படவேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் திங்கட்கிழமை பி. ப. 4 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேரவேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. திங்கட் கிழமைக்கும் வெள்ளிக்கிழமைக்கும் (இரு நாட்களும் உட்பட) இடையில் விடுமுறை ஏற்படின் முடிவு காலம் சனிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.

பேர்னுர்ட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1959 ம் ஆண்டு வைகாசி (மே) மாதம் 15 ந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது